**ஜூலை – 09**

# TNPSC துளிகள்

- வேதியியல் ஆயுதங்களைத் தடை செய்வதற்கான அமைப்பானது (OPCW) இந்தியாவின் தேசிய இரசாயன ஆயுத உடன்படிக்கை ஆணையத்துடன் (NACWC) இணைந்து, ஆசியாவில் உள்ள பங்குதார நாடுகளின் தேசிய அதிகாரிகளின் 23வது பிராந்தியக் கூட்டத்தினை புது டெல்லியில் உள்ள வாணிஜ்யா பவனில் கூட்டியது.
- குரோஷியாவின் ஜாக்ரெப்பில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு கிராண்ட் செஸ் டூர் போட்டியின் ரேபிட் பிரிவில் இந்திய சதுரங்க வீரர் D. குகேஷ் பட்டம் வென்றார்.
- ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள கடன் வழங்கும் நிறுவனமான மஷ்ரெக் ஆனது, குஜராத் சர்வதேச நிதித் தொழில்நுட்ப நகரத்தில் சர்வதேச நிதிச் சேவைகள் மைய வங்கிப் பிரிவை அமைத்த முதல் ஐக்கிய அரபு அமீரக வங்கியாக மாற உள்ளது.
- இந்தியக் கடற்படையின், கடற்படை விமானப் பிரிவின் போர்ப் பிரிவில் சேர்க்கப்பட்ட முதல் பெண்மணியாக துணைப் படைத் தலைவர் ஆஸ்தா பூனியா வரலாறு படைத்து உள்ளார்.
- இந்தியா உத்தரப் பிரதேசத்தின் மீரட்டின் இராணுவ ரீமௌண்ட் கால்நடைப் படையில் குதிரையின நோய் இல்லாத தனது முதல் காப்புப் பகுதியினை (EDFC) அமைத்தது.
    - உலக விலங்கு சுகாதார அமைப்பு (WOAH) ஆனது, இந்திய விளையாட்டு துறையில் பயன்படுத்தப்படும் குதிரைகளின் உலகளாவிய பங்கேற்பை நன்கு அதிகரிக்கும் வகையில், இந்த வசதியை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளது.
- ஒடிசா மாநிலத்தின் பூரி நகரமானது பகவான் ஜெகந்நாதர் மற்றும் சக தெய்வங்கள் ஆலயம் திரும்பும் பயணமான பஹுடா யாத்திரைக்கு தயாராகி வருகிறது.
    - பஹுடா யாத்திரை என்பது கண்டிச்சா கோயிலிலிருந்து ஸ்ரீ ஜெகந்நாதர் தனது கோயிலுக்குத் திரும்பும் புனித பயணத்தைக் குறிக்கிறது.

# தேசியச் செய்திகள்

## மோட்டார் வாகன விதிகள் 2025




- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகமானது 2025 ஆம் ஆண்டு மோட்டார் வாகன விதிகளை வெளியிட்டுள்ளது.
- இந்தப் புதிய வழிகாட்டுதல்கள் ஆனது ஊபர், ஓலா மற்றும் ராபிடோ போன்ற மோட்டார் வாகன சேவை வழங்கீட்டு நிறுவனங்களை (MVA) நிர்வகிக்கின்றன.
- இந்த விதிகளானது 2019 ஆம் ஆண்டு மோட்டார் வாகன (திருத்த) சட்டத்தின் 36வது

பிரிவின் கீழ் வருகின்றன.

❖ இந்தச் சட்டமானது வாகன சேவை வழங்கீட்டு நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குவது குறித்து மாநில அரசுகளுக்கு வழி காட்ட மத்திய அரசினை அனுமதிக்கிறது.

❖ இந்த வழிகாட்டுதல்கள் ஆனது கட்டண விகிதங்கள், உரிமம் மற்றும் கைபேசி செயலி வடிவமைப்பு ஆகியவை தொடர்பானது ஆகும்.

❖ அவை தனியார் இருசக்கர வாகனங்களை வாடகை வாகனங்களாக இயக்க வேண்டி அனுமதிக்கின்றன.

❖ இது முன்னர் கர்நாடகா போன்ற மாநிலங்களில் தடை செய்யப்பட்டது.

## பள்ளி மதிப்பீட்டிற்கான முதல் தேசியப் பயிலரங்கம்

❖ கல்வித் துறை அமைச்சகம் மற்றும் PARAKH (தேசிய மதிப்பீட்டு மையம்) ஆகியவை புது டெல்லியில் ஒரு தேசிய பயிலரங்கத்தினை நடத்தியது.

❖ இந்த PARAKH ஆனது, NCERT (தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி சபையின்) கீழ் அமைக்கப் பட்டுள்ளது.

❖ அனைத்து மாநில மற்றும் ஒன்றியப் பிரதேசப் பள்ளி வாரியங்களை ஒரு பொதுவான மதிப்பீட்டுத் தளத்தின் கீழ் கொண்டு வருவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




## INC-WMC சுரங்க உச்சி மாநாடு




❖ உலகச் சுரங்க மாநாட்டின் (INC-WMC) இந்திய தேசிய குழுவானது பொறுப்பான சுரங்க நடவடிக்கைகள் குறித்து ஐதராபாத்தில் ஒரு மாநாட்டை நடத்தியது.

❖ இது 'சிறந்தச் சுரங்க மூடல் நடைமுறைகள் மூலம் நிலையான மற்றும் பொறுப்பான சுரங்க நடவடிக்கைகள்' என்ற கருத்துருவில் நடைபெற்றது.

❖ இந்த மாநாட்டின் சில முக்கிய வெளியீடுகளில் பசுமை நடவடிக்கை குறித்த கையேடு,

தாமிரம் மற்றும் அலுமினியம் குறித்த கொள்கை ஆவணங்கள் 2025 மற்றும் RECLAIM கட்டமைப்பு ஆகியவை அடங்கும்.

- சுரங்கத் தொழில் துறைக்கு உதவுவதற்காக என்று, ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஒற்றைச் சாளர அனுமதி வழங்கீட்டு அமைப்பு போன்ற சில புதிய செயற்கருவிகளும் தொடங்கப் பட்டன.

### SAKSHAM-3000

- SAKSHAM-3000 ஆனது பெரிய அளவிலான கணினித் தொகுப்புகள் மற்றும் எண்ணிம வலையமைப்புகளுக்கு ஆற்றல் அளிப்பதற்காக வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இது 1G முதல் 400G வரையிலான ஈதர்நெட் வேக விருப்பத் தேர்வுகளுடன் 400G இணைப்பின் 32 முனையங்கள் செயல்பட ஆதரிக்கிறது.
- இது தரவு மையங்கள், 5G மற்றும் 6G வலையமைப்புகள் மற்றும் பல்வேறு செயற்கை நுண்ணறிவு பணிகளுக்காக கட்டமைக்கப்பட்டுள்ளது.
- CROS (C-DOT திசைவி (ரௌட்டர்) இயக்க முறைமை) முறைமையில் இயங்குகின்ற இந்த சாதனமானது, பல்பிரிவாக்கம் சார்ந்த மற்றும் மிகவும் நெகிழ்வான கட்டுப்பாட்டை வழங்குகிறது.
- இது தொலைத் தொடர்பு மேம்பாட்டு மையத்தினால் (C-DOT) உருவாக்கப்பட்டது.




## சர்வதேசச் செய்திகள்

### குவாட் நாடுகளின் முக்கிய கனிமங்கள் திட்டம்

- குவாட் நாடுகளின் குழுவானது, முக்கிய கனிம விநியோகத்தைச் சீரான நிலையில் வைத்திருப்பதற்காக ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- வாஷிங்டன் D.C. நகரில் நடைபெற்ற வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்திற்குப் பிறகு இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டது.
- மின்னணு கழிவுகளைக் கையாள்வது மற்றும் சில முக்கியக் கனிமங்களை மறுசுழற்சி செய்வதும் இதில் அடங்கும்.
- நாற்கரப் பாதுகாப்பு பேச்சுவார்த்தை (குவாட்) என்பது இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா இடையேயான ஒரு முறைசாரா உத்தி சார் மன்றமாகும்.

- இது மிகச் சுதந்திரமான, தடையற்ற மற்றும் வளமான இந்திய-பசிபிக் பிராந்தியத்தை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டது.




## கிராண்ட் நைல் அணை 2025





- பல ஆண்டு கால பணிகளுக்குப் பிறகு புளூ நைல் நதியில் கிராண்ட் எத்தியோப்பியன் ரினையசன்ஸ் அணையின் (GERD) கட்டுமானப் பணிகளை எத்தியோப்பியா நிறைவு செய்துள்ளது.
- 6,000 மெகாவாட்டுகளுக்கு மேலான அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் கொண்டுள்ள இந்த அணையானது, எத்தியோப்பியாவின் மின் உற்பத்தித் திறனை இரட்டிப்பாக்கும்.
- சரியான முறையிலான நீர்ப் பயன்பாட்டிற்காக, உகாண்டா உள்ளிட்ட நதியின் மேல் மட்ட நாடுகளிடமிருந்து எத்தியோப்பியா ஆதரவைப் பெற்றது.
- நைல் படுகையில் உள்ள பத்து நாடுகள் 2024 ஆம் ஆண்டில் இந்த நீர்ப் பயன்பாட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன ஆனால் இந்த ஒப்பந்தம் எகிப்து அல்லது சூடான் ஆகியவற்றினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.
- இந்த அணையானது சூடான் நாட்டின் எல்லைக்கு அருகில், எத்தியோப்பிய நாட்டின்

தலைநகரிலிருந்து (அடிஸ் அபாபா) சுமார் 500 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

## ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய 2040 ஆம் ஆண்டு பருவநிலை இலக்கு

- 1990 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2040 ஆம் ஆண்டிற்குள் நிகர பசுமை இல்ல வாயு (GHG) உமிழ்வினை 90% குறைப்பதே இதன் இலக்காகும்.
- 2040 ஆம் ஆண்டு இலக்கு ஆனது, 2050 ஆம் ஆண்டிற்குள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பருவநிலை நடுநிலைமையை அடைய உதவுகிறது.
- இந்த இலக்கானது ஐரோப்பியப் பசுமை ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும்.
- 2030 ஆம் ஆண்டிற்கான தற்போதைய இலக்கானது, 1990 ஆம் ஆண்டின் நிலைகளுடன் ஒப்பிடும் போது குறைந்தபட்சம் 55% உமிழ்வைக் குறைப்பதாகும்.
- இந்தத் திட்டமானது, ஐரோப்பிய ஒன்றியப் போட்டித் திறன் வழிகாட்டி, தூய்மையான தொழில்துறை ஒப்பந்தம் மற்றும் செலவு குறைந்த ஒரு எரிசக்தி செயல் திட்டத்துடன் ஒத்துப் போகிறது.




# பொருளாதாரச் செய்திகள்

## கடனை முன்கூட்டியே செலுத்துவது மீதான கட்டணங்கள் நீக்கம்




- இந்திய ரிசர்வ் வங்கியானது, வணிகக் கடன்களில் முன்கூட்டியே செலுத்துவது மீதான கட்டண முறைகளை நிறுத்துவதற்காக புதிய விதிகளை வெளியிட்டுள்ளது.

- தனிநபர்கள் மற்றும் சிறு வணிகங்களுக்கான (MSE) மாற்று விகிதக் கடன்களுக்கு இந்த விதிகள் பொருந்தும்.
- இந்த மாற்றங்கள் ஆனது 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும்.
- கடன்கள் முன்கூட்டியே செலுத்தப்பட்டால் வங்கிகள் மற்றும் NBFC நிறுவனங்கள் இனி கட்டணம் வசூலிக்க முடியாது.
- முன்னதாக, வணிகம் அல்லாத தனிநபர் கடன்களுக்கு மட்டுமே கடனை முன்கூட்டியே செலுத்தும் அபராதங்கள் விதிக்கப்படாமல் இருந்தது.
- இது வங்கிகள், NBFC மற்றும் பெரிய நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளை உள்ளடக்கியது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்தியாவின் முதல் தனியார் செயற்கைக்கோள் அகலப்பட்டை சேவை

- ஐதராபாத்தில் உள்ள அனந்த் டெக்னாலஜிஸ் நிறுவனமானது, இந்தியாவின் முதல் தனியார் செயற்கைக்கோள் அகலப்பட்டை சேவையை அறிமுகப்படுத்த உள்ளது.
- இந்தச் சேவையானது, 2028 ஆம் ஆண்டிற்குள் ஒரு புவிநிலைச் சுற்றுப்பாதை (GEO) தொடர்பு செயற்கைக் கோளுடன் தொடங்கும்.
- இந்தச்செயற்கைக்கோள் ஆனது வினாடிக்கு 100 ஜிகாபிட்கள் (Gbps) வரையிலான தரவு வேகத்தை வழங்கும்.
- GEO செயற்கைக்கோள்கள் ஆனது பூமியிலிருந்து 35,000 கிலோ மீட்டர் உயரத்தில் உள்ள சுற்றுப்பாதையில் நன்கு நிலை நிறுத்தப்பட்டு, ஒரு செயற்கைக்கோள் மூலம் பெரியப் பகுதிகளுக்கு இணைப்பினை அளிக்கும்.




## இரண்டு முறை அழிவுறும் நட்சத்திரம்


- ஐரோப்பிய தெற்கு ஆய்வகம் (ESO) ஆனது ஒரு வெண்ணிறக் குறு நட்சத்திரத்தில் இரட்டை வெடிப்பு நிகழ்ந்ததற்கான முதல் காட்சிப் பூர்வ ஆதாரத்தைக் கண்டறிந்து உள்ளது.
- மீவொளிர் விண்முகிலின் (சூப்பர்நோவா) ஒரு எஞ்சிய பாகமான SNR 0509-67.5 ஆனது 160,000 ஒளி ஆண்டுகளுக்கு மேலான தொலைவில் அமைந்துள்ளது.

- இந்த கண்டறிதல் ஆனது மிகப் பெரிய தொலைநோக்கி (VLT) மற்றும் பல்லடுக்கு நிற மாலையியல் ஆய்வுக் கருவி (MUSE) ஆகியவற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளப் பட்டது.
- அறிவியலளர்கள் அந்த நட்சத்திரம் ஒரு முறை அல்ல, இரண்டு முறை வெடித்த ஓர் அரிய அண்ட நிகழ்வினை உறுதிப்படுத்துகின்றனர்.
- முந்தைய ஒரு கருதுகோள் என்னவென்றால், வெண்ணிறக் குறு நட்சத்திரங்கள் ஆனது சந்திரசேகர் வரம்பைத் தாண்டிய பின்னரே வெடிக்கும் (சூரியனின் நிறை 1.4 மடங்கு).
- வெண்ணிறக் குறு நட்சத்திரங்கள் அருகிலுள்ள நட்சத்திரத்திலிருந்து ஹீலியத்தைக் கைப்பற்றி, முதல் வெளிப்புற வெடிப்பை ஏற்படுத்தியது.
- முதல் வெடிப்பு உள்நோக்கி ஒரு அதிர்ச்சி அலையை அனுப்பி, அதன் மையத்தை வெப்பமடையச் செய்து இரண்டாவது வெடிப்பை ஏற்படுத்தியது.
- முதல் வகை மீவொளிர் விண்முகில் ஆனது ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியின் தரவு மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### சிலி மற்றும் அர்ஜென்டினாவில் கடும் குளிர்




- ஓர் அரிய துருவ குளிர் அலையானது மிகக் குறைந்த வெப்பநிலையுடன் தெற்கு தென்

அமெரிக்காவைத் தாக்கி வருகிறது.

❖ ஜூன் 30 ஆம் தேதியன்று, சிலி மற்றும் அர்ஜென்டினா ஆகிய இரு நாடுகள் துருவப் பகுதிகளுக்கு வெளியே அமைந்த பூமியின் மிகவும் குளிரான இடங்களாக மாறின.

❖ சில பகுதிகளில் வெப்பநிலையானது மைனஸ் 15 டிகிரி செல்சியஸ் அல்லது 5 டிகிரி பாரன்ஹீட்டாகக் குறைந்தது.

❖ குளிர் அலையானது துருவத்தில் தோன்றும் ஆன்டிசைக்ளோன் (எதிர் சூறாவளி) எனப் படும் ஓர் உயர் அழுத்த வானிலை அமைப்பால் ஏற்பட்டது.

## கார்சீனியா குசுமே




❖ கார்சீனியா குசுமே என்பது வடகிழக்கு இந்தியாவின் அசாம் மாநிலத்தில் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள ஒரு மர இனமாகும் என்பதோடு இது அசாமிய மொழியில் தோய் கோரா என்று அழைக்கப்படுகிறது.

❖ இது வெப்பமண்டல மரங்கள் மற்றும் புதர்களின் ஒரு பெரிய குழுவான கார்சீனியா இனத்தைச் சேர்ந்தது.

❖ இந்த மரமானது பசுமை மாறாத வகையினைச் சார்ந்தது என்பதோடு இது இரு பாற் கூறுகள் தனித் தனியாக அமைந்த (டையோசியஸ்) மேலும் 18 மீட்டர் உயரம் வரையில் வளரக் கூடிய இனமாகும்.

❖ அந்தப் பகுதிகளில், வெப்பத் தாக்கத்தைத் தணிப்பதற்காக என புத்துணர்ச்சியூட்டும் ஷர்பத் பானம் தயாரிக்க இதன் பழம் பயன்படுத்தப்படுகிறது.

❖ இந்தப் பழமானது சமையலிலும் நீரிழிவு மற்றும் வயிற்றுப்போக்குக்கான பாரம்பரிய மருத்துவத்திலும் பயன்படுத்தப்படுகிறது.

❖ அசாமில் மட்டும் 12 இனங்கள் மற்றும் 3 வகையான கார்சீனியா உள்ளது.

## போர்ச்சுகலில் அரிய திரள் மேகம்

❖ வெப்ப அலையின் போது போர்ச்சுகலில் உள்ள ஒரு கடற்கரையில் ஓர் அரிய சுருள் மேகம் தோன்றியது.


❖ இந்த குழாய் வடிவ மேகம் ஆனது ஒரு பெரிய அலை போல கிடைமட்டமாக உருண்டு வருவது போல் தோன்றியது.

- இது ஒரு தாழ் நிலையிலான, கிடைமட்டமான மற்றும் ஒப்பீட்டளவில் அரிதான ஆர்கஸ் வகை மேகமாகும்.
- குளிர்ந்த காற்று கடற்கரைக்கு அருகில் சூடான, ஈரப்பதமான காற்றைச் சந்திக்கும் போது திரள் மேகங்கள் உருவாகின்றன.
- அவற்றுடன் திடீர் காற்று, ஒரு சிறிய கடல் கொந்தளிப்பு அல்லது மாறும் வானிலைச் சூழல்களும் தோன்றலாம்.
- இந்தத் சுருள் மேகங்கள் எந்த இயற்கைப் பேரழிவு அல்லது சுனாமி அபாயத்தையும் குறிக்கவில்லை.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## வேளாண்மையில் இளையோர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்




- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆனது, "வேளாண் உணவு முறைகளில் இளையோர்களின் நிலை" குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- குறைவான வருமானம் கொண்ட நாடுகளில் அதிகச் சார்பு நிலை இருந்த போதிலும், வேளாண் உணவு முறைகளில் 2005 ஆம் ஆண்டில் சுமார் 54% ஆக இருந்த இளையோர் வேலைவாய்ப்பு 44% ஆகக் குறைந்துள்ளது.
- 15 முதல் 24 வயதுடைய உலகளாவிய இளைஞர்களில் சுமார் 20 சதவீதத்திற்கும் அதிகமானோர் வேலைவாய்ப்பு, கல்வி அல்லது பயிற்சியில் (NEET) ஈடுபடவில்லை என்பதோடு இதே போன்றச் சூழலில் பெண்களும் இரு மடங்கு அதிகமாகப் பாதிக்கப்

படுகின்றனர்.

- வேளாண் உணவு முறைகள் 45% என்ற அளவிற்குப் பங்களிப்பதுடன், இளைஞர்களின் NEET நிலையை நீக்குவது உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியை 1.4%, சுமார் 1.5 டிரில்லியன் டாலர் அதிகரிக்கக்கூடும்.
- நகர்ப்புற இளையோர்களின் பங்கேற்பு தற்போது சுமார் 54% ஆக உள்ள நிலையில், கிராமப்புற இளைஞர்களில் 5% மட்டுமே தொழில்துறை வேளாண் உணவு முறைகளில் பங்கேற்கின்றனர் என்பதோடு இது எதிர்காலத் தொழிலாளர் வளத்தின் மிகப்பெரும் பற்றாக்குறையைக் குறிக்கிறது.

# மாநிலச் செய்திகள்

## இராஜஸ்தானின் வறுமை இல்லாத கிராமத் திட்டம்

- கிராமங்களில் இருக்கும் வறுமை நிலையைக் குறைப்பதற்காக இராஜஸ்தான் மாநில அரசானது, 'பண்டிட் தீன்தயாள் உபாத்யாய கரிபி முக்த் காவ்ன் யோஜனா' எனும் ஒரு திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள (BPL) குடும்பங்கள் மிகப் படிப்படியாக வறுமைக் கோட்டிற்கு மேலே செல்ல உதவுவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- இத்திட்டத்தின் முதல் கட்டம் ஆனது சுமார் 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 5,000 கிராமங்களில் அமல்படுத்தப்படும்.
- இந்தத் திட்டமானது வாழ்க்கைத் தரத்தை நன்கு மேம்படுத்துவதிலும் சமூக மற்றும் பொருளாதார இடைவெளிகளைக் குறைப்பதிலும் கவனம் செலுத்துகிறது.





# இதரச் செய்திகள்

## ஐதராபாத் மருந்து நிறுவன விபத்து 2025

- சிகாச்சி இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் ஐதராபாத் பிரிவில் ஏற்பட்ட ஒரு மோசமான வெடிப்பு ஆனது, மைக்ரோகிரிஸ்டலின் செல்லுலோஸ் எனும் நுண் படிகமுடைய (MCC) ஒரு நாரிழைமத்தினை உருவாக்கியது.
- MCC என்பது வேதியியல் ரீதியாக செயலற்ற, உடலால் உறிஞ்சப்படாத, மேலும் சருமத்தை எரிச்சலூட்டாத மூலக்கூறு ஆகும்.
- இது மருந்துகள், உணவு, அழகு சாதனப் பொருட்கள் மற்றும் பிற தொழில் துறைகளில்

பயன்படுத்தப்படும் ஒரு பிணைப்பு மற்றும் சீரமைப்பு காரணியாகும்.

- MCC ஆனது மருந்துகளில் எடை சேர்க்க உதவுவதோடு, மருந்தின் முக்கியக் கூறுகள் திறம்படச் செயல்பட உதவுகிறது.
- இந்த வெடிப்பில் 36 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர் என்பதோடு இந்த நிகழ்வு என்பது பாதுகாப்புக் கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் பராமரிப்பில் உள்ள பெரும் இடைவெளிகளை வெளிக் கொணர்ந்தது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★